

# மீனாவின் மின் அஞ்சல் காதல்

**பொன் குலேந்திரன் - கனடா**

நாட்டுக்கு நாடு, தலைநகரில் சில விலையுயர்ந்த இடங்கள் இருப்பதுண்டு. அது போல் கொழும்பில் கறுவாத் தோட்டம் என்று அழக்கப்படும் கொழும்பு 7 பகுதியில் தான் முன்னைய ஜனாதிபதி ஜயவர்தனாவின் வீடு இருந்தது. அந்தப் பகுதியில் ஒரு காலத்தில் கறுவா மரங்கள் ஏராளமாக இருந்தன. அதனால் அந்தப் பகுதியை “சினமன் கார்டன்ஸ்”; என அழைப்பார்கள். 1505 இல் போர்த்துக்கேயர்களின் இலங்கை வருகைக்கு பின்னரும் அதன் பின்னர் ஒல்லாந்தர் , பிரித்தானியர்களால் கறுவா வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. படிப்படியாக கறுவாவின் மதிப்பு குறைந்து அந்த பகுதியில் நிலத்தின் விலை உயர்ந்தது. கறுவா மரங்கள் மறைந்து, பணக்காரர்களான வணிகர்களும் , டாக்டர்களும் வாழும் வீடுகளும், வெளிநாட்டுத் தூதரங்களின் அலுவலகங்களும் தோன்றியதே அவ்விடத்தில தோன்றியதே காரணமாகும். அந்தப் பகுதியில் தம்மதிப்பை மக்களுக்கு காட்ட பிரித்தானிய ஆட்சியின் போது வோர்ட் பிளேஸ், பார்ன்ஸ் பிலேஸ், ரொஸ்மீட் பிளேஸ், கம்பெல் பிளேஸ், கில்போர்ட் கிரசென்ட், மெக்கார்த்தி வீதி போன்ற வீதிகளின் பெயர்களில் வீதிகள் பல தோன்றின. இந்தப் பெயர்கள் எல்லாம் பிரித்தானிய ஆட்சியின் போது இலங்கையில் இருந்த கவர்னர்களின்; நினைவாகச்

சூட்டப்பட்ட பெயர்களாகும். தாம் நாட்டை விட்டு போனாலும் இலங்கையர்கள் தம்மை மறக்கக் கூடாது என்பதற்காக வைத்த பெயர்கள் அவை. அந்த வரிசையில் வோர்ட் பிளேஸ் (Ward Place) முக்கியமாக டாக்டர்கள் வாழும் இடமாகும். 1855 இல் பதினொராவது கவர்னராக இருந்த சேர் ஹென்றி ஜோர்ஜ் வோர்ட்டின் (Sir Henry George Ward) பெயர் அந்த வீதிக்கு சூட்டப்ட்டது. காலப்போக்கில் தேசீய உணர்வோடு அந்தப் பெயர் தர்மபாலா மாவத்தை எனப்பெயர் மாற்றம் செய்யப்பட்டது. அந்த வீதியில், 65 ஆம் இலக்கத்தில், பிரபல்ய கண் டாக்டர்; செல்வராஜாவின் இரண்டு மாடி வீடு அமைந்துள்ளது. பாதுகாப்பு கருதி உயர்ந்த, கண்ணாடித் துண்டுகள் பதித்த மதில்கள் வீட்டைச்சுற்றி இருந்தது, உத்தரவின்றி உள்ளே வரமுடியாதவாறு காவலுக்கு ஒரு கூர்கா வேறு இருந்தான். கூர்காவுக்கு உதவியாக "ஒமைகா" என்ற அல்சேஷள் நாய் வேறு.

அழகிய ரோஜா, போகன்வில்லா, செம்பருத்தை, பல வர்ணங்களில் பூக்கும் ரோடென்டிரன், குண்டு மல்;லிகை, பவள மல்லிகைச் செடிகள் கொண்ட பூந்தோட்டம் வீட்டுக்கு மேலும் அழகைக் கொடுத்தது. செல்வராஜாவுக்கு பூக்கள் மேல் நல்ல பிரியம்.

கண்வைத்தியத்துறையில் செல்வராஜா ஒரு ராஜாவாகவே திகழ்ந்தார். பணத்துக்கு அவருக்கு குறைவில்லை. யாழ்ப்பாணத்தில் சுண்டிக்குளியை பிறப்பிடமாக கொண்டவர் டாக்டர் செல்வராஜா. அவரது தந்தையார் ஜெயராஜாவும் ஒரு டாக்டராக இருந்தவர். பரியோவான் கல்லூரியில் ஆரம்பக் கல்வி பயின்று, கொழும்பு மருத்துவக் கல்லூரியில் படித்து டாக்டரானவர் செல்வராஜா. இங்கிலாந்து சென்;று மேலும் படித்து கண்வைத்திய நிபுணரானவர். கண்புரை ( Catract), விழித்திரை ( Retina, கண்அழுத்தம் ( Glaucoma) சம்பந்தப்பட கண் வியாதிகளை வெற்றிகரமாகக் ¡காயண்டவர்.

கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணத்தில் அவருக்கு கண் மருத்துவ கிளினிக்குகள் இருந்ததினால் அவரது பொருளாதாரமும், கண் வைத்தியத் திறமையும் எவ்வளவுக்கு உறுதியானது என்பதை தெரிந்து கொள்ளத் தேவயில்லை. பிரபல அரசியல் வாதிகள் , வணிகர்கள், பணம்படைத்தவர்கள் அவரது வாடிக்கையாளர்களாக இருந்தனர்.

வீட்டில் வி;யுயர்ந்த கார்கள் மூன்று வைத்திருந்தார். அதில் வோக்ஸ்வகன் கார்; ஒன்றை "மீனா" என்று செல்லமாக அழைக்கும் தன் அருமை மகள் மீனாட்;சியின் சொந்தப் பாவனைக்கு கொடுத்திருந்தார் தேவையான நேரம்; மீனாட்;;சி தன்னோடு லேடீஸ் கொலேஜ்ஜில் படித்த சினேகிதிகளுடன் ஒட்டர்ஸ் (Otters Club) நீச்சல் குளத்துக்கும், வேறு கேளிக்கைளுக்கும் போய் வருவாள். அவளுக்கு கட்டுப்பாடு என்பதில்லை. மீனா தன் சிறு வயதிலேயே தாய் சரோஜாவை, இழந்தாள். தாயில்லா குறையைப் போக்க அவளுக்கு அளவுக்கு மீறிய செல்லம் கொடுத்து வளர்த்தார் ராஜா. அவளை கவனிக்க அவரது தூரத்து சொந்தக்காரியும், வயது வந்த சாந்தம்மாவை நியமித்தார். பெயருக்கு ஏற்ப சாந்தமான குணம் அவள், திருமணமாகாதவள். மீனா எதைச் செய்தாலும் பொறுத்துக்கொள்வாள் தாயில்லாப் பிள்ளை என்று. வாயுக்கு ருசியான உணவுகைகளைச் மீனாட்;சிக்குச் சமைத்து கொடுப்பாள். அதோடு தோட்டத்தைக் கவனிக்க வேலைக்காரன் "தம்பி" என அழைக்கப்படும் தம்பிள்ளையும், "சிறீ" என அழைக்கப்படும் டிரைவர் சிறிபாலாவும் அவ்வீட்டில் உதவிக்கு இருந்தார்கள். சாந்தம்மாவுக்கு குடும்பம் என்று இல்லாத படியால் மீனா தான் எல்லாம். அவளுக்குத் தேவையான உணவு, உடை ஆகியவற்றை கவனித்துக்கொள்வாள். எதைச் செய்வதானாலும் மீனாவைக் கேட்டுத்தான் செய்வாள். காலையில் பெட் கோப்பியோடு மீனாவை படுககையில் இருநது எழுப்புவது முதற்கொண்டு இரவு மீனா

படுககைக்கு போகும் போது ஒரு கப் பால கொடுக்கும் வரை மீனாவின தேவைகளை கவனிப்பது “ஆச்சி என்று மீனாவால் அழைக்கப்படும் சாந்தம்மா.

*******

காலை பத்துமணியிருக்கும். வீட்டுத் தொலைபேசி இரு தடவை அடித்துவிட்டு நின்றது. சாந்தம்மா கைவேலையாக இருந்தபடியால் அவளால் தொலைபேசியைப் போய் உடனடியாக எடுக்கமுடியவில்லை. செல்வராஜவுக்கு வரும் தொலை பேசி அழைப்புகளுக்கு பதில் அளித்து வாடிக்கையாளர்களை சந்திக்கும்; திகதி , நேரம் ஆகியவற்றை குறித்து கொள்வது அவரது பிரத்தியேக செயலாhளரான மாலினியின் கடமை. அன்று மாலினி செல்வராஜாவுடன் யாழ்ப்பாண கிளினிக்கிற்;கு வேலை காரணமாகப் போய்விட்டாள். அழைப்புகளுக்கு பதில் சொல்ல ஒருவரும் இல்லாத போது அழைத்தவர்கள் வொயிஸ்மெயிலில்( Voice mail) தங்களது பெயர் , தொலைபேசி எண், அழைத்ததின் காரணம் ஆகியவற்றை பதிவு செய்வார்கள். ஆனால் அன்று, மூன்றாம் தடவையும் தொலைபேசி அடிக்கும் போது மீனாட்;சி தன் காரை போர்டிக்கோவில் நிறுத்திட்டு உள்ளே வரவும் நேரம் சரியாக இருந்தது.

“ராசாத்தி. பல நேரமாய் டெலிபோன் அடித்தபடி இருக்குது. யார் அடிக்கிறது என்று கேளும்”, என்றாள் அடுப்படியில் கைவேலையாக இருந்த சாந்தம்மா. மீனாட்;சியை செல்லமாக ராசாத்தி என்று தான் சாந்தம்மா அழைப்பது வழக்கம். செல்வராஜா தன் மகளை “குஞ்சு” என்றுதான் கூப்பிடுவார். அப்படி குஞ்சு என்று தன்னை தன் சினேகிதிகளோடு இருக்கும் போது கூப்பிடக் கூடாது என்று தகப்பனாருக்கு கட்டளையிட்டிருக்கிறாள் மீனாட்;சி .

“ ஹலோ யார்; அங்கை பேசுகிறது?” டெலிபோனை எடுத்து யார் அழைத்தது என விசாரித்தாள் மீனா.

“நான் மதியழகன் பேசுகிறன். டொக்டர் செல்வராஜாவோடு என் தாயாருக்கு அப்பொயின்மண்ட் எடுக்க வேண்டும் அது தான் போன் செய்தனான்”, ஒரு இனிமையான குரலில் பதில்வந்தது. பின்னனியில் எம் எஸ் சுப்பலஷ்மியின் “காற்றினிலே வரும் கீதம்” என்ற பாடல் கேட்டது. மீனாவுக்கு மிகவும் பிடித்தமான பாடல் அது.

“ டொக்டர் யாழ்ப்பாணக் கிளினிக்கிற்கு போய் விட்டார். நாளை தான் வருவார். உங்கள் விபரங்களை சொல்லுங்கோ நான் குறித்துக் கொள்ளுகிறன். அவர் வந்ததும் உங்களுக்கு டெலிபோன்கோல்வரும்“;. தொலை பேசியில் பேசிய மதியழகன் முழுவிபரத்தையும் கொடுத்தான். தொலைபேசியை அவன் வைக்க முன், “ கொஞ்சம் பொறுங்;கோ. உங்களுக்கு எம் எஸ் யின் பாடல்கள் விருப்பமா”? தன் சந்தேகத்தைப் போக்க மீனா கேட்டாள். டெலிபோனில பெசிய குரலால் கவரப்பட்ட மீனாவுக்கு, பேசியவனோடு தொடர்ந்து பேச வேண்டும் போலிருந்தது. பெயருக்குகேற்ற அழகனாக இருப்பானோ? கர்நாடக இசையில் ஆர்வம் உள்ளவர் போல இருக்கிறது. கர்நாடக சங்கீதம் கற்றவரோ. மனதுக்குள் கற்பனை செய்து கொண்டாள் மீனா.

“ ஏன் அப்படி கேட்கிறீங்கள்?”

“ இல்லை. நீங்கள் போனில் கதைக்கும் போது, பின்னனியில் எம் எஸ் சின் காற்றினிலே வரும் பாடல் கேட்கிறது. அது தான் கேட்டனான்.”

“ எம் எஸ்சின் பாடல்களை யாருக்குத்தான பிடிக்காது.? எனக்கு பட்டம்மாள் , வசந்தகோகிலம், எம் எல் வசந்தகுமாரி; பாடல்கள் கூட

பிடிக்கும்” பதில் வந்தது.

“ அப்படியா?. நீங்கள் கர்நாடகசங்கீத ரசிகர் போல் இருக்குது”

“ ஓம். எனக்கு கர்நாடக சங்கீதத்திலை விருப்பம்.”.”

“ வேறு எந்த பாடகர்களுடைய பாடல்களை வைத்திருக்கிறீர்கள்.”

“ என்னிடம் தியாகராஜபாகவதர், பியூ சின்னப்பா, செம்பை வைத்தியநாதர், கிட்டப்பா, பாலமுரளி கிருஷ்ணா, டி ஆர் மகாலிங்கம் பாடிய பாடல்கள் முதற்கொணடு சிடீயில் வைத்திருக்கிறன்”.

“ அடேயப்பா! அவர்கள் எல்லாம் பழைய பாடகர்கள். கர்நாடக சங்கீதத்தில் இவ்வளவு ஆர்வம் காட்டுகிறீர்களே. அதை முறைப்படி கற்றீர்களா?”, தன் சந்தேகத்தை நீக்கக் கேட்டாள் மீனா.

“ இல்லை. என் அம்மா முறைப்படி கர்நாடகச் சங்கீதம் கற்றவ. ஒரு காலத்தில் இலங்ரக வானொலியில் பாடியவ. இப்போ பாடுவதில்லை. அது சரி ஏன் இந்த கேள்வியைக் கேட்டீர்கள். அது சரி நீங்கள் யார்?”
“நான் டாக்டர் செல்வராஜாவின் ஒரே மகள் மீனாட்சி. என்னை மீனா என்று கூப்பிடுவார்கள். உங்கள் குரல் கேட்க இனிமையாக இருப்பதால் தான் அந்தக் கேள்வியைக் கேட்டேன் அது சரி எனக்கும் பழைய பாடல்கள் என்றால் விருப்பம். அதுவும் பாரதியார் பாடல்களை விரும்பிக் கேட்பேன். உங்களிடம் உள்ள சிடீயில் இருந்து என்னிடம் இல்லாத பாடல்களை கொப்பி எடுத்து தரமுடியுமா?”

“ மீனாட்சி உங்களுக்கு எந்த பாடல்கள் தேவை.? யார் பாடகர்கள் என்று எனக்கு விபரங்களை எனக்கு இமெயிலில் அனுப்புங்கள். அவை என்னிடம் இருந்தால் நிட்சயமாகத் தருகிறன் ”.

“ மன்னிக்கவும். என்னை மீனா என்று அழையுங்கள். அது சரி உங்களது இமெயில் அட்ரஸ் என்ன?. மீனாட்;சிக்கு மதியோடு தொடர்பை தொடர்ந்து வைத்திருக்க வேண்டும் போல் இருந்தது.

“ எழுதிக் கொள்ளுங்கள். ஆயவாi;hழவஅயடை.உழஅ ”

“ அடடா என்ன ஆச்சரியம். எனது இமெயில் கூட சூடான இமெயில் தான்”

“ எதைச் சொல்ல வருகிறீhகள்?”

“ இல்லை, ஹொட் மெயிலுக்கு பகிடியாக என் சினேகிதிகள் சூடான இமெயில என்பினம். எனது இமெயில் அட்ரசை எழுதிக் கொள்ளுங்கள். “ஆநநயெ;hழவஅயடை.உழஅ”. எனக்கு உங்களின் பதில் வந்தவுடன் நாம் இருவரும் ஒரு நாள் சந்திப்போம். உங்களை நேரில் சந்தித்து பேசவேண்டும் போல இருக்கு.”

“ நல்லது மீனா. நீங்கள் கேடகும் பாடலகள் இருந்தால் உடனே அறிவிப்பேன். ஆதன் பிறகு எங்கு நாங்கள் டிப்போ சந்திப்பது என்பதை முடிவு செய்வோம்” என்றான் மதியழகன். தொடர்ந்து பேச வேண்டு; என்பது மீனாவின் ஆசை. சாந்தம்மாவிடம் இருந்து “ராசாத்தி சாப்பாடு ரெடி. சாப்பிட வாரும் என்று அழைப்பு வந்தது.

“ சரி மதி, ஆச்சி சாப்பிட என்னை கூப்பிடுகிறா. நான் போக வேண்டும். உம்முடைய டெலிபோன் நம்பர் இங்கை பதிவாகி இருக்கிறது தானே. இமெயில் வந்தவுடன் நான் கோல் எடுத்து கதைக்கிறன.; உம்மோடை கதைத்ததில் சந்தோஷம். டீலந ஜெற” என்று டெலிபோனை வைக்க மனமில்லாமல் மீனா விடைபெற்றுக்கொண்டாள்.

இந்த அனுபவம் மீனாவுக்கு புதிதல்ல. அவளுக்கு ஏற்கனவே சுரேஷ், கணேஷ் என்ற பெயர்களில் இரு போய் பிரண்ட்ஸ் இருந்தார்கள். பொழுது போகாவிட்டால் அவர்களோடு வம்பளப்பதில் அவளுக்கு மனதிருப்தி. அவர்கள் இருவருக்கும் மியூசிக்கிற்கும் வெகு தூரம். சுரேஷ் ஒரு ரக்கர் பிளேயர். கணேஷ் ஒரு கிரிக்கெட் பைத்தியம். அவர்களோடு கதைத்தால் ரக்கரையும், கிரிக்கட்டையும் பற்றித் தான் கதைப்பார்கள். அவாகளுக்கும் மியூசிக்கிற்கும் வெகு தூரம். என்ன செய்வது இருவரும்; அப்பாவுக்குத் தெரிந்த டாக்டர்களின் மகன்கள் ஆயிற்றே. அதனால், மூன்றாவது போய் பிரண்டாக, தனது விருப்பத்துக்கு ஏற்ற ஒருவன் கிடைக்கமாட்டானா என்று ஏங்கிக் கொண்டிருந்த அவளுக்கு எதிர்பாராதவாறு மதியழகன் தொலைபேசியில் அறிமுகமானான். அது போதும் அவளுக்கு தன் புதிய நண்பனைப் பற்றி சினேகிதிகளுக்கு புகழ்வதற்கு.

“ அடடா. மதி வேலை செய்கிறாரா அல்லது படிக்கிரா? என்னைப் போல் கார் வைத்’திருக்கறாரா. தந்தை என்னவாக இருக்கிறார்?. அவர் இருப்பது கொழும்பிலா? இவைற்றை கேட்டு அறிய மறந்து போனேனே. பரவாயில்லை. அடுத்தமுறை கதைக்கிற போது பேச விஷயம் வேணுமே” என்று மனதுக்குள் மதியோடு கதைக்க ஏற்கனவே திட்டம் போட்டிருந்தாள் மீனா.

*******

தனது இமெயிலை அடிக்கடி செக் செய்தபடி இருந்தாள் மீனா. மதியோடு பேசி ஒருமணித்தியாலத்துக்குள் தனக்கு வந்த இமெயிலைப் பார்த்தவுடன் அவளுக்கு சந்தோஷம் தாங்க முடியவில்லை. உடனடியாக மதியடமிருந்து பதில் இமெயிலில் வந்திருந்தது. அவள் கேட்ட பாடல்கள் எல்லாம் தன்னிடம் இருப்பதாக அவன இமெயிலில்

எழுதியிருந்தான். சம்மதமிருந்தால் இருநாட்களில் சந்தித்து நேரடியாக பேசுவோம் என்று எழுதியிருந்தான். அவனது பதிலுக்கு சந்திப்புக்கு சம்மதம் தெரிவித்து, சந்திக்கும் இடத்தைபற்றிய விபரம் கேட்டு மின் அஞ்சலில் பதில் அளிதாள மீனா.
மதியை சந்திக்கப் போகும் இரு நாட்களும் மீனாவுக்கு இரு வருடங்களாக இருந்தது.. தொடர்ந்து அவர்களின் நட்பு இமெயில்கள் மூலம் வளர்ந்தது. தினமும் குறைந்தது நாலைந்து இமெயில்களாவது அவர்களுக்கிடையே பரிமாறப்படும். சினிமா, பாடகர்கள் , பொப் இசை, போன்றவறறை பற்றிய விஷயஙகளை அமயிலில பரிமாரிக் கொணடாhகள். மதியைப்பற்றி தனக்கு வேண்டிய முழு விபரங்களையும் மீனாட்;சி பெற்றுவிட்டாள்.

மதியழகனின் தந்தையார் துபாயில் ஒயில் கொம்பெனி ஒன்றில் பிரதம அக்கொண்டனாக இருக்கிறாhராம். மாதம் 30,000 டிராம்; சம்பளமாம். துபாயில்;, ஜுமெய்ரா என்ற பணக்காரர்கள் வாழும் இடத்தில் பங்களா. சமைப்பதற்கு மலையாள வேலைக்காரண் கொம்பெனி கொடுத்திருந்தது. டிரைவரோடு கார் வேறு. வருடத்துக் இருதடவை இரு கிழமைகளுக்கு லீவில் வந்து போகலாம். தனது படிப்பு முழுச்செலவையும் அந்த ஒயில் கம்பெனி கட்டுகிறதாம். அதனால் தான் கொழும்பு இன்டர்நஷனல் ஸ்கூலில் படிப்பதாக இமெயிலில் எழுதியிருந்தான். இமெயில்களில் மதியழகன் கொடுத்திருந்த விபரத்தின்படி தனக்கு ஈடான செல்வம் படைத்தவன் போல மீனாவுக்கு தெரிந்தது. எதற்கும் மதியை சந்தித்துப் பேசி உறவைத் தொடருவதா அல்லது விடுவதா என மீனா தீர்மானித்தாள்.

******

அன்று வெள்ளிக்கிழமை. மதியை அன்று காலை பதினொரு மணிக்கு லிப்பேர்டி சினிமா தியேட்டர் வாசலில் சந்திப்பதாக மீனா தன் இமெயிலில் எழுதியிருந்தாள். தனக்கு பிடித்த பச்சை நிற சர்வா கமீஸ் ஆடை அணிந்து தனது வோகஸலகன்; காரில் மதியை சந்திக்க வருவதாகவும், முடிந்தால் இருவரும் தன காரில் கிறீன் கபினுக்குப் பகல் உணவு; என்றும் எழுதியிருந்தாள்.

“ அதற்கு பதில் அளித்த மதி, தான் பட்டிக் சேர்ட் அணிந்து வருவதாகவும்.

மற்றைய இளைஞர்களை விட தான் சற்று உயரமானவன், சிவந்த மேனி உள்ளவன் என்றும் பதில் அளித்திருந்தான் மதியழகன்.

இந்த விபரங்களை வைத்து மதியை அடையாளம் கண்டுகொள்ளலாம் என்ற தைரியத்தோடு தனது வோக்ஸ்வகன் காரில் லிப்N;பர்டி தியேட்டரை நோக்கிப் புறப்பட்டாள். சாந்தம்மாவுக்கு தான் வெளியே போகும் காரணத்தை மீனாh சொல்லவில்லை. மதியச் சாப்பாட்டுக்கு தான் ஒரு சினேகிதி ஒருத்தியோடு வெளியே ரெஸ்டரண்டுக்கு போவதாகவும் தனக்கு சாப்பாடு வைக்க வேண்டாம் என்று மட்டும் அறிவித்துவிட்டு போனாள்.

மதியைச் சந்திக்கப் போகுறோமே என்ற ஆவல் அவளுக்கு. அவனது தோற்றததை கற்பனை செயது கொண்டாள். காரை லிப்பேர்டி தியேட்டர் கார் பார்க்கில் நிறுத்திவிட்டு தியேட்டர் வாசலை நோக்கி நடந்து சென்றாள். அவள் கண்கள பட்டிக் சேர்ட் அணிந்த உயரமான சிவந்த மேனியுள்ள இளைஞனை தேடியது. அவள் கண்களுக்கு மதி எழுதியிருந்த குறிப்புகளோடு ஒரு இளைஞனும் பட்டிக் சேர்ட்டோடு உடனடியாக தென்படவில்லை. மதி ஒரு வேலை தன்னை ஏமாற்றிவிட்டானோ என்று மீனா யோசித்தாள். அப்போது தியேட்டர் வாசலிருந்து சில அடிகள் தூரத்தில், கையில கைத்தடியொன்றோடு சன்

கிலாசும்;, பட்டிக் சேர்ட்டோடு ஒரு உயரமான இளைஞன் மீனாட்;சியின் கண்களுக்கு தென்பட்டான்.

“சந்தேகம் இல்லை. ஆமாம் அது நிட்சயம் மதிதான்” என்றது அவள் மனம். அநத அவ்விளைஞனின் கையில் இருந்த கைக்கோல ; அவளுக்கு அதர்hச்சியைக் கொடுத்தது. அந்தநேரம், யாரொ ஒருவன் அந்த அவளைஞனின் கையைப்பிடித்து தியேட்டர் வாசலுக்கு போவதற்கு உதவி செய்வதைக் கண்டாள்;.

“என்ன கறுப்புக் கண்ணாடி அணிந்து கையில்; கோல் வைத்திருக்கிறாரே நடக்க முடியாதவர் போல இருக்குது.. அந்த கோல்தான் அவருக்கு வழிகாட்டியா? அப்ப மதி கால்கள் ஊனமான இளைஞனா.? போலியோவால் பாதிகப்பட்டவரா? அவள் பார்த்த காட்சி அவளுக்கு எதிர்பாரத அதிhச்சியைக் கொடுத்தது. தன் நின்ற இடத்தை விட்டு அவள் அசையவில்லை. அப்போ நான் இமெயில் காதலித்தது ஒரு முடமானவனையா? அப்போ என்காதலுக்கு முற்றுப்பள்ளி வைக்க வேண்டியது தானா? மீனாட்சி ஏமாற்றத்தால் தடுமாறினாள்.
“நானாகவே போய் என்னை ஒரு முடவனுக்கு அறிமுகப்படுத்திக் கொள்வதா. அது நடக்காத காரியம். நான் ஏமாந்து போனேன். ஆளை நேரடியாக மேலும் பார்க்காமல் மின் அஞ்சலில் நட்பையும் ஆசைகளையும் வளர்த்தேனே”. மேலும் இளைஞனை சந்திக்காமல், கோபத்தோடும் காரை நோக்கி திரும்பிச் சென்றாள்; மீனா. இனிமையான குரலைக் கேட்டு காதலித்து ஏமாற்றமடைந்தேனே. என்ன மடைச்சி நான் என்று தன்னைத் தானே திட்டிக்கோண்டாள்.

கோபம்தோடும் ஏமாற்றத்தோடும் வீடு திரும்பிய மீனாவைக் கண்ட சாந்தம்மாவுக்கு ஆச்சரியமாக இருந்தது. “என்ன ராசாத்தி, இவ்வனவு கெதியிலை திரும்பி வந்திட்டீர். சாப்பிட்டுவிட்டீரா” சாந்தம்மா

கேட்டாள்.

“ஓம் ஆச்சி. எனக்கு தலையிடிக்குது. நான் படுகப்போறன். டெலிபோன அடித்து யாihவது என்னோடு பேச வேண்டும் என்று கேட்டால் நான் வீட்டில் இல்லை என்று சொல்லுங்கோ”. ஆச்சியோடு பேச்சைத் தொடராமல் தன் அறைக்குள் போய் விறுக்கென்று அறைக் கதவைச் சாத்திக்கொண்டாள் மீனா.

********